[2015 செப்டம்பர் 14

244—

வாசனைத் திரவியத் தொழிற்சாலை

5986 திரு. பி.வி. கதிரவன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கல்லூத்து ஊராட்சியில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியம், கல்லூத்து ஊராட்சியில் வாசனைத் திரவியத் தொழில் நிறுவனம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும்கூட, தொழில் தொடங்க எவரேனும் முன்வருவார்களேயானால், அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மானியங்கள் தந்து உதவும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 9 மற்றும் 10 ஆம் தேதிகளில், தொழில் முதலீட்டாளர்களைத் தமிழகத்திற்கு அழைத்து, உலகத் தொழில் மாநாட்டினை நடத்தியிருக்கின்றார்கள். நம்முடைய தமிழகத்தினுடைய நிலைப்படி, ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குத் தமிழகத்திலே முதலீட்டாளர்கள் பல்வேறு தொழில்களிலே முதலீடு செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மாநாட்டினை நடத்தினார்கள். ஆனால், நாம் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாக இரண்டரை இலட்சம் கோடி ரூபாய்*

2015 செப்டம்பர் 14]

அளவிற்குத் தமிழகத்திலே முதலீடு செய்வதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதலீட்டாளர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல; அந்த முதலீட்டிலே ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குத் தென் மாவட்டங்களில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு முதலீடு செய்யப்படும் என்று அறிவித்ததற்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே இது நீண்ட நாள் கோரிக்கை. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், ஒரு சில எதிர்க்கட்சியினர், 'நான்கரை ஆண்டுக் காலம் கழித்து இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துகிறார்கள்' என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தினுடைய முன்னேற்றத்தை மட்டுமே சிந்திக்கின்றவராக இருப்பதால்தான், தொலைநோக்குத் திட்டம் 2023-ஐக் கொண்டுவந்து திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முன்னேற வேண்டுமென்ற சிந்தனைக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தேர்தலை நோக்கிப் பார்க்கவில்லை. ஆனால், எதிர்க்கட்சியினர் தேர்தலை நோக்கிப் பார்க்கிறார்கள் என்று தோன்றுகிறது. அந்த அடிப்படையிலே, இந்தியாவிலேயே தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக வரவேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனதாரப் பாராட்டி மகிழ்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியத்தில் உள்ள பகுதிகளில், கிட்டத்தட்ட 75 கிராமங்களிலே மலர்களைப் பயிரிடுகிறார்கள். மல்லிகைப் பூ, சாமந்திப் பூ, மரிக்கொழுந்து, மருவு மற்றும் ரோஜாப் பூக்களை அந்தப் பகுதிகளிலே பயிரிடுகிறார்கள். அந்தப் பூக்களை அவர்கள் காலையிலே வேக வேகமாகப் பறித்து எடுத்துக் கொண்டு மார்க்கெட்டிற்குச் செல்கின்ற ஒரு அவல நிலை இருக்கின்றது. அதன்மூலம் அந்த

விவசாயிகளுக்குக் குறைந்த விலை கிடைக்கிறது. அந்த இடத்தில் ஒரு வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, கல்லூத்து, பெருமாள்பட்டு பகுதியில் இருக்கின்ற கல்யாணிபட்டியில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மதுரை தெற்கு வட்டம், வளையம்பட்டி கிராமத்தில் ஒன்றும், புதுப்பட்டி கிராமத்தில் ஒன்றும், மங்களங்குடி கிராமத்தில் இரண்டும், பேரையூர் வட்டம், துளுக்கச்சிநாயக்கனார் கிராமத்தில் ஒன்றும், ஆக மொத்தம் 5 வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதேபோன்று, திண்டுக்கல் மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில், 495 ஹெக்டர் நிலப் பரப்பில் மல்லிகைப் பூக்கள் சாகுபடி செய்யப்பட்டு, சுமார் 4,338 மெட்ரிக் டன் அளவிற்கு விளைச்சல் கிடைத்து வருகிறது. இதேபோன்று, 282 ஹெக்டர் நிலப் பரப்பில் இதர பூக்கள் சாகுபடி செய்யப்பட்டு, 1,085 மெட்ரிக் டன் அளவிற்கு மட்டுமே விளைச்சல் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல, இத்தகைய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்றால், நாளொன்றுக்கு 8 மணி நேரம் இயங்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 4,000 கிலோ மல்லிகைப் பூ கிடைக்க வேண்டும். இத்தகைய வாசனைத் திரவியங்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகள் அனைத்தும் இப்பொழுது 3 மாதங்கள் மட்டுமே செயல்படுகின்ற வகையில் இருக்கின்றன. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, வாசனைத் திரவியம் தயாரிக்கும்

தொழிற்சாலை அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஏற்கெனவே பல்வேறு தொழிற்சாலைகளுக்கு முதலீட்டு மானியம் வழங்கப்பட்டிருப்பது போன்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, மதுரை மாவட்டத்திலே, 2013 ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு தொழிற்சாலை அமைக்க முதலீட்டு மானியமாக 89,400 ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலை சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முதலீட்டு மானியம் வழங்கி, சிறப்பாகச் செயல்பட வழிவகுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விரிவான பதிலுக்கு நன்றி. உசிலம்பட்டி தொகுதியில், இதுபோன்ற தொழிற்பேட்டையோ, தொழிற்சாலையோ எதுவும் இல்லை. எந்தவொரு தனி நபரும் இதுவரை அந்தப் பகுதியில் வந்து முதலீடு செய்யவில்லை. அரசுதான் அந்தப் பகுதியில் முதலீடு செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதுமட்டுமல்லாமல், சேடப்பட்டி ஒன்றியத்தில் சிட்கோ அமைப்பதற்கு 59 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதே அவையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்பொழுது சிட்கோ அமைக்கும் பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கு இடப் பிரச்சினை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதில் தலையிட்டு இடப் பிரச்சினையைத் தீர்ப்பார்களேயானால், இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டிலேயே இந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், அவற்றை அரசு அமைப்பது கிடையாது. தனியார் மற்றும் தொழில்முனைவோர்கள் விருப்பப்பட்டு வருவார்களேயானால், அவர்களுக்குப் பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், இந்த 4 ஆண்டுக் காலத்தில் மட்டும் இப்படிப்பட்ட பல்வேறு தொழிற்சாலைகளை அமைப்பதற்கு 42,318 நிறுவனங்களுக்கு ரூ.623 கோடியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியிருக்கிறது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதில் மதுரை மாவட்டத்தில் மட்டும் இந்த நான்கு ஆண்டுக் காலத்தில், சிறு தொழிலைத் துவங்குவதற்காக 1,404 நிறுவனங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 21.57 கோடி ரூபாய் நிதியை வழங்கியிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உசிலம்பட்டி பகுதியில் மட்டுமல்ல; திண்டுக்கல் மாவட்டத்திலும் கிட்டத்தட்ட 60 சதவிகித விவசாயிகள் பூக்களைப் பயிரிட்டு, உற்பத்தி செய்து*

2015 செப்டம்பர் 14]

கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய உள்ளூர் முதலீட்டாளர்கள் வாசனைத் திரவியத் தொழிற்சாலையை அமைக்க முன்வருவதில்லை என்பதுதான் கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய அனுபவமாகும். நம்முடைய உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்கூட, உலக முதலீட்டாளர்களை ஒன்று சேர்த்தது குறித்து தனது பாராட்டைத் தெரிவித்தார்கள். நமது தமிழக அரசு வாசனைத் திரவியத் தொழிற்சாலையை தென் மாவட்டங்களில் துவங்கினால் வேலைவாய்ப்பு கிடைக்கும்; அரசுக்கும் நல்ல இலாபம் கிடைக்கும். ஆகவே, அரசு அந்தத் தொழிற்சாலையை துவங்குமா என்ற கேள்வியை முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டபோது, மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, இப்போது கோரிக்கையை மட்டும் வைக்கிறார்கள். அவரும் அந்த முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு வருகை தந்திருக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உரிமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல; தென் மாவட்டங்களிலே மிகப் பெரிய அளவில் தொழிற்சாலைகளைக் கொண்டுவர வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களுடைய அந்தப் பேச்சிலே சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தார்கள். எனவே, தென் மாவட்டங்களில், தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணி, இந்த முதலீட்டாளர்கள்கள் மாநாட்டின் மூலமாக அதனைச் செயல் வடிவமாகக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் நிலக்கோட்டை வட்டாரத்தில் மூன்றும், வத்தலக்குண்டு வட்டாரத்தில் ஒன்றும், ஆக மொத்தம் நான்கு வாசனைத்

திரவியத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

245—

சத்துணவு மையக் கட்டடம்

***51656 திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சி, சேம்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை அகற்றி, 220 சதுர அடி பரப்பளவு கொண்ட வைப்பறையுடன்கூடிய புதிய சத்துணவுக் கூடம் கட்டுவதற்காக ரூபாய் 2,40,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, சத்துணவுக் கூடம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, சேம்பள்ளி ஊராட்சியில்*